
# நல்வழி காட்டி



# நல்வழி காட்டி

## தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம்

அவர்களின்

## 1900 - 2000

# நூற்றாண்டு மலர்

தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுக்குழு
யாழ்ப்பாணம்.

உ

திருவேற்காடு ஸ்ரீதேவி கருமாரி அம்மன் துணை!



அமரர்

# செல்லையா தங்கராஜா

அவர்களுக்கு

# சமர்ப்பணம்

# முன்னுரை

1900 ஆம் ஆண்டு தென்மராட்சியில் பிறந்த தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நல்லவர், வல்லவர், சிறந்த சிந்தனையாளர். சமூக மறுமலர்ச்சியாளர். பன்மொழி அறிவும் பல்துறை அனுபவமும் கொண்டவர். பல்பரிமாண ஆளுமையுடையவர். இவரது நண்பரான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், தமிழருக்குச் சம பிரதிநிதித்துவம் (ஐம்பதுக்கு ஐம்பது) கோரிக்கையை முன்வைக்கப் போவதாகக் கூறியபோது, தசாவதானி சரணவமுத்து ஆறுமுகம், சம பிரதிநிதித்துவக் கோரிக்கைக்குப் பதிலாகத், தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு "வீட்டோ" (VETO) தடுப்பு அதிகாரம் வேண்டுமென்று கோருமாறு ஆலோசனை கூறினார். இவரது ஆலோசனையை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் நிராகரித்ததுடன், அதன்பின், "வீட்டோ" ஆறுமுகம் என இவரை அழைத்ததனால், அப் பெயராலும், ஐந்து தானக் கணக்குகளை மனதால் செய்யும் திறன், போன்ற பல திறன்களைப் பெற்றிருந்தால், (WIZARD) "விஸாட்" ஆறுமுகம் எனவும் அழைக்கப்பட்டார். தமக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் எதையும் பயன்படுத்தாது , மிக எளிமையாக வாழ்ந்தார். மக்கள் நல்வாழ்வைத் தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு நீதிநெறிகூறும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், கல்வி ஒழுக்கம், ஞானக்குறள், மூதுரை, வெற்றி வேற்கை ஆகிய நூல்களை மறுபதிப்புச் செய்து இலவசமாக விநியோகித்தார். தனது சுயசரிதையையும் தனது சிந்தனைகளையும் எழுதிவைத்துவிட்டு 1993 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். மக்களை நீதிநெறியில் வாழ வைக்க விரும்பி, அன்று, அவர் தெரிவு செய்த நூல்களுடன், அறிவுரைகளையும் அவரது சிந்தனைகளையும் சேர்த்து, நல்வழிகாட்டி என்ற நூலாக அச்சிட்டு மக்களை நன்னெறியில் வாழ வைக்க விழைகிறோம். ஞானக்குறள் என்னும் நூல், பாதாளமூலி எனப்படும் கறையானால் அழிக்கப்பட்டு விட்டதால் அதனை இத் தொகுப்பில் சேர்க்க இயலவில்லை.

க. சிவராமலிங்கம்

செயலர்

தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுக்குழு

# உலகப்பிரஜை தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம்

தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம், உலகத்தை, நாடுகள் என்று கூறுகளாகப் பிரித்துப் பார்க்காமல், ஒரு அலகாக - ஒன்றாகப் பார்த்துத் தம்மை உலகப்பிரஜை எனவும், தாம் உலகுக்குப் பணிபுரிவதாகவும் தெரிவித்துப் பல நற்பணிகளை ஆற்றியுள்ளார்.

## கல்விப்பணி

தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளையில், பலர், கல்வியில் ஆர்வமின்றிக் கையெழுத்திடக்கூடத் தெரியாதவர்களாக, அறியாமை இருளில் மூழ்கி இருந்ததை அவதானித்து மனம் நொந்தார். தனது உயர் கல்விப்படிப்பைத் தியாகம் செய்தார். நேரம் கிடைத்தபோது கிறிஸ்தவ மதகுருமாரிடம் லத்தீன், ஆங்கிலம், டச்சு மொழிகளைக் கற்றார். வீணே காலத்தைக் கழித்த இளைஞர்களுக்கு, அவர்கள் மனம் கொள்ளத்தக்க வகையில் கல்வியின் மகிமையை எடுத்துரைத்தார். இளைஞர்களுக்குத் தேவலாயங்களின் முன்றலில், மாலை வேளையில் தமிழ் எழுத்துக்களை எழுதப் பழக்கித், தேவலாயங்களை அறிவாலயங் களாகவும் பயன்படச் செய்தார். ஆனால், தமிழ் எழுத்துக்கள் 247 ஆக இருப்பதைக் கண்டு மலைத்த பலர், பெரும் எண்ணிக்கையிலுள்ள தமிழ் எழுத்துக்களை எழுதிப் பழகுதல் இயலாத காரியம் என்று கூறிக் கற்கத் தயங்கினர். இவர்களது பயத்தை நீக்குவதற்கு, "கையெழுத்துப் போடக்கற்றுக்கொள்" என்ற கல்வித்திட்டத்தை தீட்டி, ஒவ்வொருவரதும் பெயரை எழுதுவதற்குத் தேவையான எழுத்துக்களை மாத்திரம் எழுதப்பழக்கினார். எழுத்துக்களை எழுதிப் பழகும்போது, எழுத்துக்களை எழுதப் பழகுவது கடினமன்று என்றுணர்ந்த பலர், எல்லா எழுத்துக்களையும் எழுதப் பழகிக் கல்விகற்று வாழ்க்கையில் ஏற்றம் கண்டனர். ஆனால், பெண்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடந்ததால் இத்திட்டம் அவர்களுக்குக் கல்விகற்க வாய்ப்பளிக்கவில்லை. பெண்கள்

வீட்டிலேயே அடிப்படைக் கல்வியைப் பெறுவதற்காக, "EACH ONE TEACH ONE" என்ற கல்வித்திட்டத்தை நடைமுறைப் படுத்தினார். இதன்படி, அவரிடம் கல்விகற்ற ஒவ்வொருவரும், கட்டாயமாக வேறு ஒருவருக்காவது கல்விகற்பிக்க வேண்டுமெனவும், அவ்வாறு கல்வி கற்றவர்களிடம் கல்வி கற்பவர்களும் கட்டாயமாக வேறு ஒருவருக்காவது கல்வி கற்பிக்கவேண்டும் என்று நிபந்தனை விதித்து, கல்வி ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு இலகுவாகக் கடத்தப்பட்டுப் பரந்து விரிந்து செல்வதற்கு வழிவகுத்தார். கல்வி கற்பிப்பதற்கு ஆண்கள் போதாமையால் வீட்டிலிருந்த பெண்களுக்கு, அவர்களது சகோதரர்கள் சிறிய தகப்பனார் ஆகியோர் கல்வி கற்பிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை இத்திட்டம் ஏற்படுத்தியது. இதனால் பெண்கள் கல்வி அறிவு பெற்றனர். விளிப்புணர்வு பெற்று முன்னேறினர்.

வித்தியாவிருத்திச்

சைவ ~~பரிபாலன~~ சபையால் நடாத்தப்பட்ட பாடசாலைகளில் கணித ஆசிரிகள் நோய்வாய்ப்பட்டு, வேறு ஆசிரியர்களால் அவர்களது கற்பித்தல் பணி நிறைவேற்றப்பட முடியாத வேளைகளில், ஹின்டு போட் இராசரத்தினம் அவர்கள், தனது நண்பரான இவரை அழைத்தார். இவரும், தொண்டர் ஆசிரியராக, பிரதியீட்டு ஆசிரியராக எதுவித ஊதியமும் பெறாது கணிதம் கற்பித்து உதவினார்.

தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள், தபால் மூலமான கல்விச் சேவை ஒன்றையும் நடாத்தினார். இதுவே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கல்விச் சேவை என்பது பெருமையுடன் குறிப்பிடத்தக்கது. மூதறிஞர் ராஜாஜி, திரு சி. ஆ. பெ. விஸ்வநாதம் போன்ற இந்தியத் தமிழ் அறிஞர்களின் நட்புக் காரணமாகக் கிடைக்கப்பெற்ற பல அரிய நூல்களைக் கொண்டிருந்த இவரது நூலகத்தைச், 'சங்கப் பலகை' என்ற இரவல் வளங்கும் நூலகம் ஆக்கினார். யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு நூல்களைச் சேகரித்து வளங்கி, அதனையும் வளம்படுத்தினார்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, உலகின் முதலாவது பெண் பிரதமராகப் பதவியேற்றதும், இலங்கையில் பெண்கள் கல்வி கற்பதற்கு ஊன்று கோலாகவும் தூண்டுகோலாகவும் விளங்கியவர்

களுடன் தொடர்பு கொண்டபோது, தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்களுடன் தொடர்பு கொண்டு உதவி ஏதும் தேவைப்படின் தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டிருந்தார். தமிழருக்கு இந்துப் பல்கலைக்கழகம் வேண்டுமென ஒரு கட்சியும், தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமென மற்றக்கட்சியும் முரண்பட்டு நின்றதால் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் எதுவும் அமைக்கப் படாதிருந்தபோது இவர், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் ஒன்றை அமைக்குமாறு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்குக் கடிதம் எழுதினார். ஏனையோர், தமது பிள்ளைகளை நல்ல அரசாங்க உத்தியோகத்தில் அமர்த்துமாறு கேட்டதாகவும், ஆனால் இவர், அவ்வாறு செய்யாது, யாழ்ப்பாணத்தின் கல்வித் தரத்தை உயர்த்தவிரும்பிப், பல்கலைக்கழக வளாகம் கேட்டதாகவும், இவரைப் பாராட்டிய திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, இவரது கோரிக்கை, சரியான சமயத்தில் விடுக்கப் பட்ட சரியான கோரிக்கை எனவும் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் அமைக்க உடனடியாக நடவடிக்கையும் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் ஓரிரு அச்சகங்களே இருந்த அக் காலத்தில், தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் தனவந்தர்களை ஊக்குவித்துப் பல அச்சகங்கள் அமைய வழிவகுத்தார். அச்சகங்கள் பல அமைக்கப்பட்டதால் பல நூல்கள் அச்சிடப்பட்டன. இவரும், TRUTHS AND MYTHS BEHIND HINDU RITUALS, HEALING SCIENCE, HORROR OF WAR (POEM), நூலகமும் கல்வியும், நீர் நிலைகள், கோபத்தின் கேடு போன்ற நூல்களை ஆக்கி வெளியிட்டார். இலங்கை திருக்குறள் பீடம் என்ற அமைப்பை நிறுவிப், பாமர மக்களும் திருக்குறளை அறிய வழிவகுத்தார்.

**கூட்டுறவுப்பணி :**

பணப்பலமின்றி, அத்தியாவசியப் பொருள் விநியோகத்தில் மாத்திரம் ஈடுபட்டிருந்த கிராமிய ஐக்கிய பண்டகசாலைகளை ஒன்றிணைத்துப், பணப்பலம்மிக்க பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமையவும், கூட்டுறவு வங்கிகள் நிறுவப்படவும், கூட்டுறவு வைத்தியசாலைகள் அமைக்கப்படவும் அயராது உழைத்தார்.

### சமூகப்பணி

திரு. மு. வைத்திலிங்கம், சேர். பொன். இராமநாதனின் வாழ்க்கை வரலாற்றை எழுதி அதனை அச்சேற்ற முடியாது திண்டாடியபோது அதனை அச்சிட உதவிபுரிந்தார். முதியோர் இல்லங்கள் நிறுவுமாறும், ஆதரவற்ற முதியோரையும் சிறுவர்களையும் தத்தெடுத்துப் பராமரிக்குமாறும், தனவந்தர்களையும் தொண்டர் நிறுவனங்களையும் ஊக்குவித்தார். ஏழைகளின் திருமணங்கள் நிறைவேறவும், ஏழைகளின் மரணச் சடங்குகள் தடையின்றி நடைபெறவும் உதவினார். முறையான றோட்டுகள் இல்லாதிருந்த யாழ்ப்பாணத்தில் றோட்டுகள் அமைக்கப் பட்டபின், சயிக்கிலில் சவாரி செய்த இவர், ஏனையோரையும் சயிக்கில் பழகச்செய்தார். சயிக்கில் பழகத் தயங்கிய பெண்களை, மாதர் மன்றங்கள் மூலம் ஊக்குவித்துச் சயிக்கிலில் சவாரி செய்யச் செய்தார். இது, பெண்கள் கௌரவமாகப் போக்குவரத்துச் செய்யவும், உயர்கல்வி நிலையங்களுக்குச் சென்று கல்வி கற்கவும் வாய்ப்பளித்தது. அத்துடன், போர்க்கால இடப்பெயர்வின் போது, மக்கள் தமது முக்கிய உடைமைகளுடன் இடம் பெயர்வதற்கும் பேருதவி புரிந்தது.

### மகளிர் நலப்பணி

இந்தியாவில் கல்விகற்றுத் திரும்பிய சிலர், அந்த நாட்டில் நிலவிய "சத்தி" என்று அழைக்கப்பட்ட விதவைகள் உடன் கட்டை ஏறல் நிகழ்வை, இங்கும் ஏற்படுத்த முயன்றபோது அதனை மூர்க்கமாக எதிர்த்தார். அதற்கு எதிராக "விதவைகள் மறுமணத் திட்டம்" என்ற திட்டத்தைச் செயற்படுத்தி "சத்தி" நடைமுறை இங்கு வேரூன்றாதவாறு தடுத்தார். விதவைகள் வாழ்வுடன் வாழ வழிவகுத்தார்.

### வைத்தியப்பணி

தடுப்பூசி, இரத்ததானம், கண்தானம், சத்திரசிகிச்சை போன்றவற்றையும், பப்பாசிப் பழத்தையும், தாதியத் தொழிலையும் மக்கள் விரும்பாத நிலை அன்று இருந்தது. இதனை அவதானித்த தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம், நாடகங்கள் மூலம் அவற்றின் மகிமையை மக்களுக்கு உணர்த்தினார். (சித்த) வர்ம வைத்திய அறிவு பெற்றிருந்ததுடன், ஆன்மீகத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த இவருக்குச், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் HONOURABLE HEALTH CONSULTANT என்ற கௌரவ அந்தஸ்தை வழங்கிக் கௌரவித்தார்.

**சமயப்பணி**

எல்லாக் கோவில்களும் தமக்கெனத் தனித் தனியான தோத்திரங்கள் கொண்டிருப்பதை விரும்பிய இவர், பல கோவில்களுக்குத் தோத்திரங்கள் ஆக்கிக் கொடுத்ததுடன் திருவூஞ்சல், பிள்ளைத் தமிழ் ஆகியவற்றையும் தொகுத்துக் கொடுத்தார்.

**விவசாயப்பணி**

முறைசாரத் தொழிளாளர்களும் முதுமையில் ஓய்வூதியம் பெற வழிவகுக்கும் திட்டங்களைத் தீட்டி, அவற்றை நடைமுறைப் படுத்துமாறு அரசிடம் கோரினார். இதுவே விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் செயலுருப்பெறக் கால்கோளாக அமைந்தது.

## நினைவு தினங்களும் நினைவுப் பேருரைகளும்

தன்னுடைய கண்ணைத் தானம் செய்தபின் உடலை மருத்துவபீடத்திற்கு வளங்குமாறு எழுதிவைத்துப் போந்த இவர் பிறந்த தினமான மார்ச் 31 ஆம் திகதி, கண்தான சிந்தனைத் தினமாகவும், அவர் வாரா உலகை அடைந்த தினமான பெப்பிரவரி 1 ஆம் திகதி மருத்துவர் தினம், தாதியர் தினமாகவும் கொண்டாடப் படுகின்றன. இவர் மறைந்து ஏழு வருடங்களுக்குள் பதின்நான்கு நினைவுப் பேருரைகள் நிகழ்த்தப்பட்டுள்ளமை ஓர் குறிப்பிடத்தக்க அம்சமாகும். "தென்மராட்சிப் பிரதேசமும் கல்வி வளர்ச்சியும்", "பார்வையைப் பறிக்கும் நோய்களும் மீள் பார்வை வளங்கும் முறைகளும்", "தலைச் சுற்றும் அதற்கான காரணிகளும்", "தொய்வு நோய்", "பெண் நோயியல்", "சுகம் என்பதன் அர்த்தங்கள்", "குருதிச் சோதனைகளும் அவற்றின் பயன்பாடுகளும்", "ஆண்களுக்கு ஏற்படும் நோய்கள், முதுமை நோய்கள்", "பெண்களுக்கு ஏற்படும் நோய்கள், "கணனியின் பன்முகப் பயன்பாடு", "மாணவர்களுக்கு உளத்தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்", "விலங்குகளிலிருந்து மனிதருக்குப் பரவும் நோய்கள்", "யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம் பாரியமும் அதன் இன்றைய நிலையும்" என்ற தலைப்புகளில் நினைவுப் பேருரைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

உ

ஔவையார் அருளிச்செய்த

# ஆத்திசூடி

## காப்பு

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

## நூல்

01. அறஞ்செய விரும்பு.
02. ஆறுவது சினம்.
03. இயல்வது கரவேல்.
04. ஈவது விலக்கேல்.
05. உடையது விளம்பேல்.
06. ஊக்கமது கைவிடேல்.
07. எண்ணெழுத்து இகழேல்.
08. ஏற்பது இகழ்ச்சி.
09. ஐயம் இட்டுண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவ தொழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகஞ் சுருக்கேல்.
14. கண்டொன்று சொல்லேல்.
15. ஙப்போல் வளை.
16. சனி நீராடு.
17. ஞயம்பட வுரை.
18. இடம்பட வீடு எடேல்
19. இணக்க மறிந்து இணங்கு.
20. தந்தை தாய் பேண்.
21. நன்றி மறவேல்.
22. பருவத்தே பயிர் செய்.
23. மண் பறித்துண்ணேல்.
24. இயல்பு அல்லாதன செயேல்.

25. அரவம் ஆடேல்.
26. இலவம் பஞ்சில் துயில்.
27. வஞ்சகம் பேசேல்.
28. அழகலாதன செய்யேல்.
29. இளமையில் கல்.
30. அரனை மறவேல்.
31. அனந்தல் ஆடேல்.
32. கடிவது மற.
33. காப்பது விரதம்.
34. கிழமைப்பட வாழ்.
35. கீழ்மை அகற்று.
36. குணமது கைவிடேல்.
37. கூடிப் பிரியேல்.
38. கெடுப்பது ஒழி.
39. கேள்வி முயல்.
40. கைவினை கரவேல்.
41. கொள்ளை விரும்பேல்.
42. கோதாட்டு ஒழி.
43. கௌவை அகற்று.
44. சக்கரநெறி நில்.
45. சான்றோர் இனத்திரு.
46. சித்திரம் பேசேல்.
47. சீர்மை மறவேல்.
48. சுளிக்கச் சொல்லேல்.
49. சூது விரும்பேல்.
50. செய்வன திருந்தச் செய்.
51. சேரிடம் அறிந்து சேர்.
52. சை எனத் திரியேல்.
53. சொற்சோர்வு படேல்.
54. சோம்பித் திரியேல்.
55. தக்கோன் எனத் திரி.
56. தானம் அது விரும்பு.
57. திருமாலுக்கு அடிமை செய்.

58. தீவினை அகற்று.
59. துன்பத்திற்கு இடங்கொடேல்.
60. தூக்கி வினை செய்.
61. தெய்வம் இகழேல்.
62. தேசத்தோடு ஒத்துவாழ்.
63. தையல் சொல் கேளேல்.
64. தொன்மை மறவேல்.
65. தோற்பன தொடரேல்.
66. நன்மை கடைப்பிடி.
67. நாடு ஒப்பன செய்.
68. நிலையில் பிரியேல்.
69. நீர் விளையாடேல்.
70. நுண்மை நுகரேல்.
71. நூல் பல கல்.
72. நெற்பயிர் விளை.
73. நேர்பட ஒழுகு.
74. நைவினை நணுகேல்.
75. நொய்ய உரையேல்.
76. நோய்க்கு இடங் கொடேல்.
77. பழிப்பன பகரேல்.
78. பாம்பொடு பழகேல்.
79. பிழைபடச் சொல்லேல்.
80. பீடு பெற நில்.
81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்.
82. பூமி திருத்தி உண்.
83. பெரியோரைத் துணைக்கொள்.
84. பேதைமை அகற்று.
85. பையலோடு இணங்கேல்.
86. பொருள்தனைப் போற்றி வாழ்.
87. போர்த் தொழில் புரியேல்.
88. மனம் தடுமாறேல்.
89. மாற்றானுக்கு இடங்கொடேல்.
90. மிகைபடச் சொல்லேல்.

91. மீதூண் விரும்பேல்.
92. முனைமுகத்து நில்லேல்.
93. மூர்க்கரோடு இணங்கேல்.
94. மெல்லி நல்லாள் தோள்சேர்.
95. மேன் மக்கள் சொல்கேள்.
96. மை விழியார் மனை அகல்.
97. மொழிவது அறமொழி.
98. மோகத்தை முனி.
99. வல்லமை பேசேல்.
100. வாது முற்கூறேல்.
101. வித்தை விரும்பு.
102. வீடு பெற நில்.
103. உத்தமனாயிரு.
104. ஊருடன் கூடி வாழ்.
105. வெட்டெனப் பேசேல்.
106. வேண்டி வினை செயேல்.
107. வைகறைத் துயிலெழு.
108. ஒன்னாரைத் தேறேல்.
109. ஓரம் சொல்லேல்.

கன்னியரைப் பொன்னான் கழிந்தோரை மற்று அயலார்
பன்னியரை மாயப் பரத்தையரை - முன்னரிய
தாதியரை நல்லோர் தழுவ நினையார் நரகத்
தீது வரும் என்றே தெரிந்து.

தன்னை அளித்தாள் தமையன் மனை குருவின்
பன்னி அரசன் பயில் தேவி - தன் மனையைப்
பெற்றாள் இவர் ஐவர் பேசில் எவர்க்கும்
நற்றாயர் என்றே நவில்.

நீதி வெண்பா

உ

ஔவைப் பிராட்டியார் அருளிச்செய்த

# கொன்றை வேந்தன்

## காப்பு

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

## நூல்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. உண்டி சுருக்குதல் பெண்டிர்க்கு அழகு.
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
8. ஏவா மக்கள் மூவா மருந்து.
9. ஐயம் புகினும் செய்வன செய்.
10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு.
11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்.
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.
14. கற்பெனப் படுவது சொல் திறம்பாமை.
15. காவல் தானே பாவையர்க்கு அழகு.
16. கிட்டாதாயின் வெட்டென மற.
17. கீழோ ராயினுந் தாழ உரை.
18. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
19. கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்.
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்.
21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
22. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
23. கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி.
24. கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.

25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.
26. சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை.
27. சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
28. சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு.
29. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
30. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்.
31. சூதும் வாதும் வேதனை செய்யும்.
32. செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்.
33. சேமம் புகினும் யாமத்து உறங்கு.
34. சையொத்து இருந்தால் ஐயம் இட்டுண்.
35. சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்.
36. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
37. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.
38. தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை.
39. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
40. தீராக் கோபம் போராய் முடியும்.
41. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.
42. தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும்.
43. தெய்வஞ் சீறின் கைதவம் ஆளும்.
44. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
45. தையும் மாசியும் வையகத்து உறங்கு.
46. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
47. தோழனோடும் ஏழமை பேசேல்.
48. நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.
49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.
50. நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை.
51. நீர் அகம் பொருந்திய ஊர் அகத்து இரு.
52. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
53. நூன்முறை தெரிந்து சீலத்து ஒழுகு.
54. நெஞ்சை ஒழித்தொரு வஞ்சகம் இல்லை
55. நேரா நோன்பு சீர் ஆகாது.
56. நைபவர் எனினும் நொய்ய உரையேல்.
57. நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்.
58. நோன்பு என்பது கொன்று தின்னாமை.

59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
60. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.
61. பிறன்மனை புகாமை அறமெனத் தகும்.
62. பீரம் பேணில் பாரம் தாங்கும்.
63. புலையுங் கொலையுங் கள்வுந் தவிர்.
64. பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்.
65. பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்.
66. பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்.
67. பையச் சென்றால் வையந் தாங்கும்.
68. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
69. போனகம் என்பது தானுழந்து உண்டல்.
70. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
71. மாரி அல்லது காரியம் இல்லை.
72. மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை.
73. மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.
74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
75. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
76. மெத்தையிற் படுத்தல் நித்திரைக்கு அழகு.
77. மேழிச் செல்வம் கோழை படாது.
78. மைவிழியார் தம் மனை அகன்று ஒழுகு.
79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.
80. மோன மென்பது ஞான வரம்பு.
81. வளவன் ஆயினும் அளவறிந்து அழித்து உண்.
82. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.
83. விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்.
84. வீரன் கேண்மை கூர் அம்பு ஆகும்.
85. உரவோர் என்கை இரவாது இருத்தல்.
86. ஊக்கம் உடைமை ஆக்கத்துக்கு அழகு.
87. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை.
88. வேந்தன் சீறின் ஆம் துணை இல்லை.
89. வைகல் தோறும் தெய்வம் தொழு.
90. ஒத்த இடத்தில் நித்திரை கொள்.
91. ஓதார்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்.

ஔவையார் அருளிச்செய்த

# கல்வி ஒழுக்கம்

## காப்பு

ஆனை முகனே அரனார் திருமகனே
ஞான முகம் பாயும் ஓர் கையோனே
ஞானமுற வித்தை கற்கும் பிள்ளைகட்கு விக்கினங்கள் வாராமல்
எஞ்ஞான்றும் நீ துணையாய் நில்.

## நூல்

1. அஞ்சு வயதி லாதியை யோது.
2. ஆதியை ஓத அறிவுண் டாமே.
3. இனியது கொடுத்து எழுத்தைத் தான்றி.
4. ஈட்டிய நற்பொரு ளெழுத்தே யாகும்.
5. உடைமை யென்பது கல்வி யுடைமை.
6. ஊமை யென்பவ ரோதா தவரே.
7. எழுதப் படுவ தெழுத்தே யாகும்.
8. ஏழை யென்பவ ரெழுத்தறி யாதவர்.
9. ஐய மேற்கினு மறிவ தெழுத்தே.
10. ஒருபொழு தாயினு மோதி நன்கறி.
11. ஓத லுடைமை வேத வித்தை.
12. ஔவியம் பேசா ராமெழுத் தறிந்தோர்.
13. கண்ணுடை யவர்கள் கற்றவர் தாமே.
14. காவல ரெனினும் கணக்கை யோர்ந்தறி.
15. கிடையா வுடைமை கல்வி யுடைமை.
16. கீர்த்தியும் பெருமையும் தருவது கல்வி.
17. குறைவறக் கற்றவன் கோடியி லொருவன்.
18. கூர்மை யென்பது குன்றாக் கல்வி.
19. கெடுப்பினுங் கல்வி கேடு படாது.
20. கேண்மை யுடைமை தாழ்விலாக் கல்வி.
21. கைப்பொரு ளென்பது கசடறு கல்வி.
22. கொற்றவன் தன்னினும் கற்றவ னுயர்ந்தவன்.
23. கோதறு கல்வி குவலயந் தருமே.

24. சகல கலைக்குந் தலைமை யெழுத்தே.
25. சாத்திரங் கற்றவன் றன்னை யறிந்தவன்.
26. சிறுமையிற் கல்வி சிலையி லெழுத்தே.
27. சீரிய தமிழைத் தெளிய வோது.
28. சுற்ற மென்பது துகளறு கல்வி.
29. சூக்கமுந் தூலமுந் தோன்றக் கற்றறி.
30. சென்றிட மெல்லாம் சிறப்பு கல்வி.
31. சேயன் என்பவன் தீங்கறக் கற்றவன்.
32. சைகையுஞ் சமர்த்துந் தந்திடுங் கல்வி.
33. சொல்லும் பொருளுந் தோன்றக் கற்றறி.
34. சோம்ப ரென்பவர் சொல்லெழுத் தறியார்.
35. தகுமெழுத் தறிந்தவன் தலைவ னாவன்.
36. தான்கற் றவற்றைச் சபைதனி லோது.
37. திருந்த வோதத் திறமுண் டாமே.
38. தீரக் கற்றவன் தேசிக னாவான்.
39. துறவோ ரென்பவர் துரிசறக் கற்றோர்.
40. தூர்த்த ரென்பவர் சொல்லெழுத் தறியார்.
41. தெளிய வோதத் திறமுண் டாமே.
42. தேசமும் நாடும் திருந்த வோது.
43. தைக்கக் கற்றவன் சமர்த்த னாவன்.
44. தொன்னூல் முழுதுந் தோன்றக் கற்றறி.
45. தோழ னாவது சோர்விலாக் கல்வி.
46. நற்பொருள் கொடுத்து நன்றா யோது.
47. நானில முழுதும் நயந்தருங் கல்வி.
48. நீசரித் தாயினுங் கற்பது நிலையே.
49. நுண்பொருள் கொடுத்து நூல்பல கல்.
50. நூறாண் டாயினுங் கல்வியை நோக்கு.
51. நெடுங்கட லோடினும் நிலையே கல்வி.
52. நேராக் கல்வி நிலையா காதே.
53. நைய வருகினும் நொய்ய நன்கறி.
54. நொந்தறி யாதவர் செந்தமிழ் கற்றோர்.
55. நோகா துண்பவர் நுண்பொருள் அறிந்தோர்.
56. பலகலை கற்றவர் பகையைக் கைவிடு.

57. பாவலர் என்பவர் பழுதறக் கற்றவர்.
58. பிழையறக் கற்றவர் பெரியவர் தாமே.
59. பீடுஞ் செல்வமும் பெறத்தருங் கல்வி.
60. புரையறக் கற்றவர் புவியாள் பவரே.
61. பூமியிற் செல்வம் புகழ்பெறுங் கல்வி.
62. பெருமை பெறுவது பேசருங் கல்வி.
63. பேதை யென்பவர் பெருநூ லறியார்.
64. பையப் பையப் படித்தே பொழுகு.
65. பொருள்மிகக் கொடுத்துப் போதக் கற்றறி.
66. போதக் கற்றவன் புண்ணியஞ் செய்தவன்.
67. மன்ன ராயினும் மறைகளை யோது.
68. மாசறக் கற்றவர் மாநில மாள்வார்.
69. மிகப்பெருஞ் செல்வம் விளைத்திடுங் கல்வி.
70. மீசுரக் கொடுத்து வித்தையைக் கற்றறி.
71. முத்தமிழ் தனக்கு மூப்பு மில்லை.
72. மூதறி வுயர்த்துந் தீதிலாக் கல்வி.
73. மெல்லிய ரெனினும் வேண்டுவ தெழுத்தே.
74. மேலோர் என்ன வித்தையைக் கற்றறி.
75. மையறு கல்வியார் மாநில மாள்வார்.
76. மொழிவ தகர முதலெழுத் தாமே.
77. மோக விகாரர் முன்னூல் பாரார்.
78. வஞ்சக மோதார் நெஞ்சுறக் கற்றோர்.
79. வாட்டந் தராது மறவாக் கல்வி.
80. வித்தை கல்லாதவர் வெறியர் ஆவர்.
81. வீரியம் பேசார் வித்தை யறிந்தோர்.
82. வெண்பா முதலாய் விளங்க வோது.
83. வையக மெல்லாம் வாழ்த்தவே யோது.
84. வௌவிப் படிக்க வாழ்வுண் டாமே.

| |
|---|
| பெண்டிர் வெய்யோர்க்குப் படுபழி எளிது.<br>சிற்றில் பெருமித்தின் அறிய.<br>முதுமொழிக் காஞ்சி |

அதிவீரராமபாண்டியன் என்னும் அரசன் அருளிய

# வெற்றி வேற்கை

(நறுந்தொகை)

1. எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்.
3. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்.
5. மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை.
6. வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல்.
7. உழவர்க்கு அழகு இங்கு உழுது ஊண் விரும்பல்.
8. மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்.
9. தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை.
10. உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.
11. பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல்.
12. குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்.
13. விலைமகட்கு அழகு தன் மேனி மினுக்குதல்.
14. அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்.
15. வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை.
16. தேம்படு பனையின் திரள் பழத்து ஒரு விதை
    வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
    ஒருவருக்கு இருக்க நிழல் ஆகாதே.
17. தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
    தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
    நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
    அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு
    மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே.
18. பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.
19. சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.
20. பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்.
21. உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்.
22. கொண்டோர் எல்லாம் பெண்டிரும் அல்லர்.
23. அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது.

24. சுடினும் செம்பொன் தன் ஒளி கெடாது.
25. அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது.
26. புகைக்கினும் கார் அகில் பொல்லாங்கு கமழாது.
27. கலக்கினும் தண்கடல் சேறு ஆகாது.
28. அடினும் பால்பெய்து கைப்பு அறாது பேய்ச்சுரைக்காய்.
29. ஊட்டினும் பால் விரை உள்ளி கமழாதே.
30. பெருமையும் சிறுமையும் தான் தர வருமே.
சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம்
பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே.
32. சிறியோர் பெரும்பிழை செய்தனராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிது.
33. நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீருக்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே.
34. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.
35. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
36. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே.
37. நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின் கீழ் இருப்பவனே.
38. எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியில் கற்றோரை மேல்வருக என்பர்.
39. அறிவுடை ஒருவனை அரசும் விரும்பும்.
40. அச்சம் உள்ளடக்கி அறிவு அகத்து இல்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சம் அற்று ஏமாந்து இருக்கை நன்று.
41. யானைக்கு இல்லை தானமும் தருமமும்.
42. பூனைக்கு இல்லை தவமும் தயையும்.
43. ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்.
44. சிதலைக்கு இல்லை செல்வமும் செருக்கும்
45. முதலைக்கு இல்லை நீத்தும் நிலையும்.
46. அச்சமும் நாணமும் அறிவு இல்லோர்க்கு இல்லை.

47. நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை.
48. கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை.
49. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
50. குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்.
51. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச்சாலை அடையினும் அடைவர்.
52. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடு இருந்து அரசாளினும் ஆளுவர்.
53. குன்று அத்தனை இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
54. எழு நிலை மாடம் கால் சாய்ந்து உக்கு
கழுதை மேய் பாழ் ஆயினும் ஆகும்.
55. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்த
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.
56. மனை அணி அணிந்த மகளிர் ஆங்கே
பிணை அணி அணிந்து தம் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடியாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.
57. இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே.
58. இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே.
59. நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லாம் இல்லை இல் இல்லோர்க்கே
60. தறுகண் யானை தான்பெரிது ஆயினும்
சிறுகண் மூங்கில் கோலுக்கு அஞ்சும்மே.
61. குன்றுடை நெடும் காடு ஊடே வாழினும்
புன்தலைப் புல்வாய் புலிக்கு அஞ்சும்மே.
62. ஆரையாம் பள்ளத்து ஊடே வாழினும்
தேரை பாம்புக்கு மிக அஞ்சும்மே.
63. கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே.
64. சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன் தேர் குறவர் தேயம் நன்றே.

65. காலையும் மாலையும் நான்மறை ஓதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே.

66. குடி அலைத்து இரந்து வெங்கோலோடு நின்ற
முடியுடை இறைவனாம் மூர்க்கனும் பதரே.

67. முதல் உள பண்டம் கொண்டு வாணிபம் செய்து
அதன் பயன் உண்ணா வணிகரும் பதரே.

68. வித்தும் ஏரும் உளவா இருப்ப
எய்த்து அங்கு இருக்கும் ஏழையும் பதரே.

69. தன் மனையாளைத் தாய்மனைக்கு அகற்றிப்
பின்பு அவள் பாராப் பேதையும் பதரே.

70. தன் மனையாளைத் தன் மனை இருத்திப்
பிறர் மனைக்கு ஏகும் பேதையும் பதரே.

71. தன் ஆயுதமும் தன் கையில் பொருளும்
பிறன் கையில் கொடுக்கும் பேதையும் பதரே.

72. வாய் பறையாகவும் நாக்கு அடிப்பு ஆகவும்
சாற்றுவது ஒன்றைப் போற்றிக் கேண்மின்.

73. பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால்
மெய் போலும்மே மெய் போலும்மே.

74. மெய்யுடை ஒருவன் சொலமாட்டாமையால்
பொய் போலும்மே பொய் போலும்மே.

75. இருவர் தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையார் ஆயின்
மனுமுறை நெறியின் வழக்கு இழந்தவர் தம்
மனமுற மறுகி நின்று அழுத கண்ணீர்
முறையுறந் தேவர் மூவர் காக்கினும்
வழி வழி ஈர்வதோர் வாளாகும்மே.

76. பழியாய் வருவது மொழியாது ஒழிவது.

77. சுழியா வருபுனல் இழியாது ஒழிவது.

78. துணையோடு அல்லது நெடுவழி போகேல்.

79. புணைமீது அல்லது நெடும்புனல் ஏகேல்.

80. எழிலார் முலை வரிவிழியார் தந்திரம்
இயலாதன கொடு முயல்வு ஆகாதே.

81. வழியே ஏகுக வழியே மீளுக.

82. இவை காண் உலகிற்கு இயலாமாறே.

ஔவையார் அருளிச்செய்த

# மூதுரை

## காப்பு

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## நூல்

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா - நின்று
தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர். 2

இன்னா இளமை வறுமை வந்து எய்தியக்கால்
இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாள் அல்லாநாள் பூத்த நன்மலரும் போலுமே
ஆள் இல்லா மங்கைக்கு அழகு. 3

அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளவாய்
நட்டாலும் நண்பு அல்லார் நண்பு - அல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 4

அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 5

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ · கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும் பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 6

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு · மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம். 7

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே · நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. 8

தீயாரைக் காண்பதுவும் தீதே திரு அற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே · தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. 9

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் · தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. 10

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டு உமிபோனால் முளையாதாம் · கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கு ஆகாது அளவு இன்றி
ஏற்ற கருமம் செயல். 11

மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்
உடல் சிறியர் என்று இருக்க வேண்டா · கடல் பெரிது
மண்ணீரும் ஆகாது அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 12

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டாதவன் நன் மரம். 13

கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து - தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 14

வேங்கை வரிப்புலி நோய்தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல் பாங்கறியாப்
புல் அறிவாளருக்குச் செய்த உபகாரம்
கல்லின் மேல் இட்ட கலம். 15

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்
வாடி இருக்குமாம் கொக்கு. 16

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு. 17

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும் - சீரிய
பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்? 18

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன். 19

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்கவேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம் மருந்து போல்வாரும் உண்டு. 20

இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலி கிடந்த தூறாய் விடும். 21

எழுதியவாறே காண் இரங்கும் மடநெஞ்சே
கருதியவாறு ஆமோ கருமம் - கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை. 22

கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடும் சினத்துப்
பொற்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே - விற்பிடித்து
நீர் கிழிய எய்த வடுப் போல மாறுமே
சீர் ஒழுகு சான்றோர் சினம். 23

நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். 24

நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்
அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 25

மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன் - மன்னர்க்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு. 26

கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண். 27

சந்தன மென் குறடு தான் தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடாது ஆதலால் - தம்தம்
தனம் சிறியர் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்
மனம் சிறியர் ஆவரோ மற்று. 28

மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் - திருமடந்தை
ஆம்போது அவளோடு ஆகும் அவள் பிரிந்து
போம்போது அவளோடு போம். 29

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். 30

நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்
கொண்ட கரு அழிக்கும் கொள்கை போல் - ஒண்தொடீ
போதம் தனம் கல்வி பொன்றவரும் காலம் அயல்
மாதர் மேல் வைப்பார் மனம்.

நல்வழி

இன்னல் தரும் பொருளை ஈட்டுதலும் துன்பமே
பின் அதனைப் பேணுதலும் துன்பமே - அன்னது
அழித்தலும் துன்பமே அந்தோ பிறரால்
இழப்பதும் துன்பமேயாம்.

நீதி வெண்பா

# அறிவுரை

1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்கவேண்டாம்.
5. போகாத இடந்தனிலே போக வேண்டாம்.
6. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.
7. நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்.
8. நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்.
9. நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்.
10. நல் இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்.
11. அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்.
12. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்.
13. மனம்போன போக்கு எல்லாம் போக வேண்டாம்.
14. மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்.
15. தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்.
16. தருமத்தை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்.
17. சினம் ஊட்டி அல்லலையும் தேட வேண்டாம்.
18. சினந்து எழுவார் வாசல் வழிச் சேர வேண்டாம்.
19. குற்றம் காண்பதைக் குறியாகக் கொள்ள வேண்டாம்.
20. கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்.
21. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்.
22. கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்.
23. கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்.
24. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.
25. வாழாமல் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்.
26. மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்ல வேண்டாம்.
27. படுத்திருந்து புத்தகங்கள் படிக்க வேண்டாம்.
28. வெஞ்சமரில் புறம் கொடுத்து மீள வேண்டாம்.
29. கூடாத குணத்தாரோடு கூட வேண்டாம்.

30. தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
31. ஒட்டுக்கேட்டு வாய் பார்த்துத் திரிய வேண்டாம்.
32. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.
33. மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்.
34. முன் கோபக்காரரோடு இணங்க வேண்டாம்.
35. வாத்தியார் கூலியை மறக்க வேண்டாம்.
36. வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்.
37. கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்.
38. பொய்க் கணக்கை ஒருநாளும் எழுத வேண்டாம்.
39. பொருவார் தம் போர்க்களத்தில் போக வேண்டாம்.
40. பிறர் நிலத்தில் அடாத்தாக இருக்க வேண்டாம்.
41. இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்.
42. எளியோரை எதிரிட்டுக்கொள்ள வேண்டாம்.
43. சேராத இடம் தனிலே சேர வேண்டாம்.
44. செய்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.
45. ஊர் சுற்றிக் கோள் சொல்லித் திரிய வேண்டாம்.
46. உற்றாரை உதாசீனம் சொல்ல வேண்டாம்.
47. பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்.
48. பிணைநின்று தொல்லைகளைத் தேட வேண்டாம்.
49. மண்நின்று மண் ஓரம் சொல்ல வேண்டாம்.
50. மனம் சலித்து மதிமயங்கித் திரிய வேண்டாம்.
51. கண் இமைக்கு மை பூசிக் கண்கேடு தேட வேண்டாம்.
52. காணாத காட்சிகளைக் கூற வேண்டாம்.
53. புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்.
54. புறம் சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்.
55. மத நிந்தை செய்வாரோடு இணங்க வேண்டாம்.
56. வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்.
57. திறம் பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்.
58. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
59. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
60. ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்.
61. கூறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்.

62. இரவினிலே பெரிதாகச் சிரிக்க வேண்டாம்.
63. தூறாக்கித் தொல்லைகளைத் தேட வேண்டாம்.
64. இரவினிலே திரிவாரோடு இணங்க வேண்டாம்.
65. வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்.
66. வெற்றியுள்ள பெரியாரை வெறுக்க வேண்டாம்.
67. வரி ஏய்த்துத் தொல்லைகளைத் தேட வேண்டாம்.
68. சயிக்கிலில் சமாந்திரமாய்ச் செல்ல வேண்டாம்.
69. சந்திகளில் வாகனத்தை நிறுத்த வேண்டாம்.
70. கூடிக் கதையளக்க வீதியோரம் நிற்க வேண்டாம்.
71. நாய் வளர்த்து வீதியேக விட வேண்டாம்.
72. நீச்சல் கற்றோர் உதவியின்றி நீச்சலறிய முயலவேண்டாம்.
73. புகை பிடித்துப் புற்று நோயால் மாள வேண்டாம்.
74. மது அருந்துவோர் அருகிலேனும் செல்ல வேண்டாம்.
75. இனிப்பு மிகச் சுவைத்துப் பற்களை இழக்க வேண்டாம்.
76. நிலத்தில் ஒருகால் சுவரில் ஒருகால் பதித்து நிற்க வேண்டாம்
77. பொரித்த பண்டங்களை மிகுதியாய் உண்ண வேண்டாம்.
78. குளத்து நீரில் குளித்துச் சொறி நோயைத் தேடவேண்டாம்.
79. கன்றுக்குப் பால்விடாது கறக்க வேண்டாம்.
80. ஐஸ்கிறீமை அதிகமாக அருந்த வேண்டாம்.
81. ஒரு நாளில் பல படங்கள் பார்க்க வேண்டாம்.
82. கண்டபடி எச்சிலைத் துப்ப வேண்டாம்.
83. மூக்கினுள்ளே மூக்குத்தூளை இழுக்க வேண்டாம்.
84. மூக்கினுள்ளே விரல் வைத்துக் குடைய வேண்டாம்.
85. ஊசியினால் பல் இடுக்கைக் குத்த வேண்டாம்.
86. நகங்களைப் பற்களால் கடிக்க வேண்டாம்.
87. தொலைக்காட்சிப் பெட்டியின் அருகிலிருந்து பார்க்க வேண்டாம்.
88. வானொலியை ஒலிகூட்டிக் கேட்க வேண்டாம்.
89. பொலித்தீன் பைகளைக் கண்டபடி வீச வேண்டாம்.
90. எலிகளை அழித்தொழிக்க மறக்க வேண்டாம்.

## தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்களின் சிந்தனைகள்

# சிந்தனை மாலை

1. தாவர விதைகள் குறிப்பிட்ட காலம் வரைக்குமே முளைக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கும். ஆசைகளோ எக் காலத்திலும் முளைக்கும் ஆற்றல் கொண்டவை. ஆசை அரும்பும்போது சிறிதாக இருக்கும். ஆரம்பத்திலேயே அதனைக் கட்டுப்படுத்துவது எளிது. வளரவிட்டால், கடல் அலைகளைப் போல ஒன்றன் பின் ஒன்றாக வந்து நிம்மதியைக் கெடுத்து மனிதரை ஆசை வலையில் சிக்க வைத்துவிடும்.

2. வாழ்வின் இலட்சியங்கள் மனிதப் பண்புகளுக்கு ஏற்றனவாக இருக்கவேண்டும்.

3. நிகழ்வு, நிகழ்ச்சி என்னும் இரு சொற்களும் இரு வேறு விடயங்களைப் புலப்படுத்தும். நிகழ்வு எமது கட்டுப்பாட்டினுள் இல்லாதது; தானாகவே நிகழ்வது. செயல் எமது விருப்பிற்குரியது, எம்மால் கட்டுப் படுத்தக்கூடியது.

4. களிப்பு, மகிழ்ச்சி, ஆனந்தம் ஆகிய மூன்று சொற்களும் புலப்படுத்தும் கருத்துக்கள் வேறுபட்டன. களிப்பு, உடல் சார்ந்தது. மிகுதியாகக் கிடைக்கும்போது தெவிட்டத்தக்கது. மகிழ்ச்சி மனம் சார்ந்தது. தெவிட்டாதது. ஆனந்தம் உள்ளம் சார்ந்தது. அது மனம் சலனத்திலிருந்து விடுபடும்போது ஏற்படும் உள்ளுணர்வு - நிலையான சுகம்.

5. எங்களது நல்ல குணங்கள் எங்களைப் பற்றிப் பிறருக்கு எடுத்துக் கூறவேண்டும். நாங்களோ எங்கள் குணங்களைப் பற்றிப் பிறருக்கு எடுத்துக் கூறக் கூடாது.

6. மன நோயுற்ற கணவனுக்குச் சிறந்த மன மருத்துவர் அவரது மனைவியே.

7. செருப்பை அளவாகவே வைத்திருப்பதைப்போலச் செல்வத்தையும் அளவாகவே வைத்திருக்க வேண்டும்.

8. இயலுமானவை எவை? இயலாதன எவை? என இனங்கண்டு இயலுமானவற்றைத் திறமையாகச் செய்தல் வெற்றியையும், இயலாதனவற்றைச் செய்ய முயல்தல் தோல்வியையும் தரும்.

9. பாடசாலை நடவடிக்கைகள் முடிவடைந்ததும் தொழிற் கல்வி, முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுப் பாடசாலைக் கட்டடங்கள் 24 மணித்தியாலமும் பயன்படுத்தப்பட வேண்டும்.

10. எதனையும் தொல்லை என எண்ணாது கையாளப் பழக வேண்டும்.

11. ஒருவரின் புத்தித்திறன் அளவீட்டை, INTELLIGENT QUOTIENT என ஒன்றாகக் கணிக்கும் முறை திருப்தியான அளவீட்டு முறை அன்று. ABSTRACT I.Q, MECHANICAL I.Q, SOCIAL I.Q, எனப் பிரித்து மதிப்பிட்டு அவற்றுக்கு ஏற்ற துறைகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

12. மருந்துகள் எல்லாம் நஞ்சுகள். ஆனால், அளவாகப் பயன் படுத்தும் போது பயன்தரும். மருத்துவர் சிபார்சு செய்யும் மருந்துகளை மாத்திரமே பயன்படுத்த வேண்டும்.

13. புகையும் மதுவும் மெல்லக் கொல்லும் நஞ்சுகள். அவற்றை நுகரத் தொடங்கும் நாள், தற்கொலை முயற்சியின் தொடக்க நாள்.

14. புகைப்பவருக்குப் பக்கத்தில் இருப்பவரும் புற்று நோய்க்கு ஆளாவதாக டாக்டர்கள் கூறுகிறார்கள். எனவே புகைப்பவரைக் கண்டால் விலகிவிட வேண்டும்.

15. தோல்வியின் போது ஏற்படும் மன வேதனையைக் குறுகிய காலத்தினுள் மறக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

16. இன்றைய மழைநீர் நாளைய குடிநீர். நீர் ஏரிகள் குழாய்கள் போன்றவை நீர் சேமிப்பு வங்கிகளாகும். மழை நீரைச் சேமிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்காவிடில் நிலக்கீழ் நீர் வற்றிவிடும். நாடு பாலைவனம் ஆகிவிடும்.

17. உரிய வழிகாட்டலின்றி ஆழமான குழாய்க் கிணறுகள் அமைத்தால் சகல கிணறுகளும் உப்புநீர்க் கிணறுகளாகி விடும். குடிநீரைப் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை தோன்றும். குழாய்க் கிணறு அதிகார சபை ஒன்றை அமைத்து இந்நிலை ஏற்படாது தடுக்க வேண்டும்.

18. நடமாடும் மண் ஆய்வு கூடங்கள் மூலம் மண் ஆய்வு செய்யும் வசதி செய்யப்படவேண்டும். மண்ணின் தேவையறிந்தே இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்த வேண்டும். கண் மூடித் தனமாக இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தினால் பயிர் நிலங்கள் பாழ் நிலங்களாகிவிடும்.

19. வேலி அடைப்பதற்குப் பணம் செலவாகின்றதே எனக் கவலைப் படக்கூடாது. வேலி அடைப்பதற்குச் செலவாகும் சிறுதொகை எல்லை வழக்குக்குப் பெருந்தொகைப் பணமும் நேரமும் செலவாவதைத் தடுக்கும்.

20. நேரம் கிடைக்கும்போது நூல்களை வாசிப்போம் என எண்ணாது, வாசிப்பதற்கென நேரத்தை ஒதுக்கி வைத்திருக்க வேண்டும். பிறரையும் வாசிக்கத் தூண்டவேண்டும்.

21. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் சொரிகின்ற வேப்பம் விதை களைப்பயன்படுத்தி வேலிகளிலிருந்து சற்றுத் தொலைவில் வேப்பம் கன்றுகளை வளர்த்துப் பயன்பெற வேண்டும். காகத்தின் எச்சத்திலிருந்த வேப்பம் விதையில், எல்லை

வேலியில் முளைத்த வேப்ப மரத்திற்குச் சண்டையிடுவதும் வழக்காடுவதும் தவிர்க்கப்படவேண்டும்.

22. முற்கோபக்காரன் வேறொரு முற்கோபக்காரனுடன் நட்பு வைக்கக் கூடாது.

23. மதங்கள் எல்லாம் வெவ்வேறான வழிகளில் மக்களை நல்வழிப் படுத்துகின்றன. எனவே, மத மாற்சரியங்களும், மதச் சண்டைகளும் என்றுமே ஏற்படக்கூடாது.

24. இரத்தானம் செய்து உயிர்காக்கும் சக்தியைக் கடவுள் எமக்குத் தந்துள்ளார். இரத்த தானம் செய்து உயிர்களைக் காப்பாற்றலாம். அத்துடன், தானம் செய்பவருக்கு இரத்த உரித்தாளர் தொகை கூடுவதால் மகிழ்ச்சியும் கிட்டும். இறைக்கும் கிணறு சுரப்பது போலப் புதிய இரத்தமும் சுரக்கும்.

25. நிதிவளமின்மையால் உயர்கல்வியைத் தொடரமுடியாதிருக்கும் மாணவர்களுக்கு உதவுவதற்கு "உயர்கல்வி உதவி நிதியம்" ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

26. பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான தகைமை பெற்ற மாணவர் பலர், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காது துயருறும் நிலையைப் பல்கலைக்கழகங்கள் நீக்க வேண்டும். பல்கலைக்கழகங்களில் நிகழும் விரிவுரைகளை ஒளிபரப்பும், ஒலிபரப்பும் செய்திட வேண்டும். இவற்றைப் பதிவு செய்த வீடியோ, ஓடியோ நாடாக்களை விற்பனை செய்ய வேண்டும். வெளிவாரியாக இவர்களுக்குப் பரீட்சைகளை நடாத்திப் பட்டங்களை வழங்க வேண்டும். புறநிலைக் கல்விப்பீடமும் (FACULTY OF EXTRA MURAL STUDIES) அமைக்கப்படவேண்டும். தபால் வழியான திறந்த பல்கலைக்கழகமும் (POSTAL OPEN UNIVERSITY) வானொலி தொலைக் காட்சி வழியான (AIR - BORNE OPEN UNIVERSITY) பல்கலைக் கழகமும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

27. நாங்கள் உயிர் வாழும்போது எமது அங்கங்களால் நன்மை யையே செய்ய வேண்டும். மரணம் சம்பவித்த பின்பு எமது சடலத்தில் நல்ல நிலையில் இருக்கும் உறுப்புக்களை, உறுப்புக்கள் பழுதடைந்து அவதியுறும் நோயாளருக்குப் பொருத்துவதற்கு வழங்குமாறு எங்களது உறவினர்களிடமும் நண்பர்களிடமும் சொல்லி வைப்பதுடன், மரண சாதனமாக அதனை எழுதிவைக்கவும் வேண்டும். கண் தானம் ஓர் புண்ணியகருமம். இத்தானத்தைச் செய்யும் வசதி யாழ்ப்பாணத் திலும் உள்ளது. அபரக்கிரிகையின் முதற்படியாகக் கண் தானம் செய்து புண்ணியம் தேடலாம்.

28. துன்புறுவோருக்கும் இயலாதோருக்கும் உதவும் போதுதான் கடவுளின் அருள் எமக்குக் கிடைக்கிறது.

29. நல்லது போனால் தெரியும். கெட்டது வந்தால் தெரியும்.

30. மன்னிக்கும் மாண்பே மகத்தான மனிதத்துவம்.

31. தாயும் தந்தையும் பிள்ளையின் உரிமையாளர்கள். ஆனால் தந்தை மாத்திரம் பிள்ளையின் உரிமையாளர் என வரை யறுப்பது போலத், தந்தையின் பெயரை மாத்திரம் பிள்ளையின் பெயருடன் சேர்த்து எழுதும் வழக்கம் தவறானது. பிள்ளையில் தாய்க்கும் உரிமை உண்டு என்பதையும் தெரிவிக்கும் வகையில் தாய் தந்தை இருவரது பெயரையும் பிள்ளையின் பெயருடன் சேர்த்து எழுதும் வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

32. பிள்ளைகளைப் பரீட்சைக்குத் தயாராக்குவது தான் கல்வியின் நோக்கம் என்று பலர் கருதுகிறார்கள். இது தவறான கருத்தாகும். நல்லொழுக்கம் போன்ற சிறந்த மனிதப் பண்புகளுடன் நன்கிசைந்த ஆளுமையையும் புத்தித்திறன் களையும் தனி ஆற்றல்களையும் வளர்த்துச் சமூக வாழ்வுக்கேற்ற பூரண மனிதர்களை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாகும்.

33. எந்தப்பரீட்சையிலும் சித்தி பெறாவிடினும் ஆளமாகவும் அகலமாகவும் ஒரு துறையைப் படித்தவர்கள் அனைவரையும்

படித்தவர்கள் என்ற பிரிவினுள்ளும், நுனிப்புல் மேய்வது போல வெறுமனே பரீட்சைக்குத் தேவையான பகுதிகளை மாத்திரம் படித்துப் பரீட்சைகளில் சித்தி பெற்றவர்கள் அனைவரையும் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் என்ற பிரிவினுள்ளும் அடக்க வேண்டும்.

34. புண் ஏற்பட்ட சலரோக நோயாளிகள், அங்கவீனர்கள், வயிற்றோட்ட நோயாளிகள், பார்வையற்றோர் போன்றோர் சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்குச் செல்வது சிரமமானதாகும். பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், உள்ளூராட்சி மன்றங்களும் வைத்தியசாலைக்குப் பொருத்தமான வாகனங்களை வாங்கி அவற்றில் வைத்தியசாலைகளை அமைத்து, வாகனங்கள் செல்லக்கூடிய வீதிகளில் வைத்தியர்களுடன் அவற்றைப் பவனிவரச் செய்யவேண்டும். மேற்குறிப்பிட்ட நோயாளர்கள், தேவை ஏற்படும்போது இவ்வாகனங்களை மறித்துச் சிகிச்சை பெற வாய்ப்பளிக்கவேண்டும்.

35. பழிவாங்கும் எண்ணம் ஏற்படவே கூடாது.

36. தாழ்வு மனப்பான்மை தைரியத்தை இழக்கச் செய்துவிடும்.

37. பொருத்தமற்ற இடங்களில் ஆலயங்கள் அமைந்து பிரச்சனைகள் தோன்றுவதைத் தடுக்க ஆலய அதிகாரசபை ஒன்று நிறுவப்படவேண்டும்.

38. திருமணத்திற்குப் பொருத்தம் பார்க்கும்போது இரு பாலாரதும் வைத்திய பரிசோதனை அறிக்கைகளையும் பரிசிலிக்கும் நடைமுறை ஏற்படுத்தப்படவேண்டும்.

39. புதுமைகளைச் சமைக்க விரும்புபவன் எண்ணற்ற எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

40. ஒரு பிள்ளை நல்லவனாவதும் கெட்டவனாவதும் அவனை வளர்க்கின்ற முறையிலும், அவன் வளர்கின்ற முறையிலுமே தங்கியுள்ளது.

## நினைவுப் பேருரைச் செய்திகளின் நறுக்குகள் சில

(ஒடுக்கிய வடிவம்)

# வோரின் எண்ணிக்கை உயர்வதால்

# ஏற்றும் தேவையும் அதிகரிக்கிறது

மான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் காயமுற்றோரின் உறவினர்கள் தாங்கள் இரத்தம் வழங்குவதைத் தவிர்ப்பதற்காக இரத்தத்தை விலைக்கு விற்பவர்களை உறவினர்கள் என்று அறிமுகஞ் செய்து அவர்கள் மூலம் இரத்தம் தருவதால் இரத்தத்தின் மூலம் நோய்கள் தொற்றும் ஆபத்து நீடிக்கிறது.

''இற்றைக்கு ஏன்பது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணப் பாரம்பரியத்திறகு அமையப் பெண்கள் குடும்

> தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுப் பேருரை நிகழ்ச்சி அண்மையில் இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. அங்கு இடம்பெற்ற உரையின் தொகுப்பு இது.

பத்திற்கான சமையல் பணியைச் செய்பவர்களாக வீட்டினுள் முடக்கிக் கிடந்தனர். தங்களிடமுள்ள திறமைகளையும், கல்வியின் மகிமையையும் அவர்கள் அறியாதிருந்தனர். இக் காலத்தில் இள வயதினராக இருந்த தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் 'கல்வி கற்ற ஒவ்வொருவரும் கட்டாயமாக வேறொருவருக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்' (EACH ONE TEACH ONE) என்ற திட்டத்தை அமை... வீட்டிலிருந்த பெ... அடிப்படைக் கல்... வழி வகுத்தார். விழிப்புணர்வு பெ... கள் வீட்டிற்கு வெ...

தனர். உயர்கல்வி பெற்று இன்று உயரிய பதவிகள் பலவற்றை வகிக்கின்றனர். இந் நிலைக்குப் பெண்கள் உயர வழிவகுத்த பெரியாருக்கு நினைவுப் பேருரை நிகழ்த்திப்பெண்கள் சார்பாக நன்றி நவில்கிறேன்''.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ். வர்ண குலராஜா தலைமையுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

பாடசாலைகள் மூலம் முறையான கல்விப் போதனை ஆரம்பமான காலத்தில், பெண்கள் மட்டுமல்ல ஆண்கள் பலரும் கல்வி கற்கத் தயங்கினர். இதற்குக் காரணம் தமிழிலுள்ள 247 எழுத்துக்களையும் பெரிய எண்ணிக்கையாகக் கருதி அத்தகைய பெரிய தொகையான எழுத்துக்களை எழுதக் கற்பது கடினம் என அவர்கள் எண்ணிப் பயந்ததேயாகும். 1900 ஆண்டில் பிறந்த தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள் இவர்களது பயத்தைப் போக்குவதற்குக் 'கையெழுத்துப் போடக் கற்றுக்கொள்' என்னும் திட்டத்தை நடைமுறைப் படுத்தி முதலில் அவர்களது பெயர்களை எழுதுவதற்குத் தேவையான எழுத்துக்களை மாத்திரம் கற்பித்தார். சில எழுத்துக்களை எழுதிப் பழகும் போது, எழுதப் பழகுவது அவ்வளவு கடினமானது அல்ல என்பதை உணர்ந்து, அவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று முறையான கல்விகற்க வழிவகுத்தார். இதுவே அவர் மேற்கொண்ட முதலாவது கல்விப் பணியாகும்; இதுவே முறைசாராக் கல்வியின் ஆரம்பமாகும் — என்றார்.

இணுவில் மத்திய கல்லூரி அதிபர் திரு துரை. எஙகரசு பேசுகையில்:— தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நூற்றாண்டான இந்த ஆண்டில், அவரது நினைவாகப் பல நினைவுப் பேருரைகள் துறைசார் நிபுணர்களால் நிகழ்த்தப்படுவதால் அவர் அன்று தொடங்கிய கல்விப் பணி இன்றும் தொடர்கிறது ஆண்டு 10 க்கான விஞ்ஞானபாடத்தில் குருதி தொடர்பான பகுதி புதிதாக அறிமுகம் செய்யப்பட்டதால் அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கற்கும் மாணவர்களுக்கும் ''குருதிப் பரிசோதனைகளும் அவற்றின் பயன்பாடுகளும்'' என்ற தலைப்பில் நிகழ்ததப் பட்டபேருரைபரந்த அறிவை வழங்கிப்பேருதவி புரிந்துள்

**19-02-2000**



கூட்டுறவாளர் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுப் பேருரை வைபவம் அண்மையில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடை பெற்றது. யாழ் - மருத்துவ பீட சமூக மருத்துவத்துறை விரிவுரையாளர் டாக்டர் சீ.எஸ், நச்சினார்க்கினியன் நினைவுப் பேருரை ஆற்றுவதை படத்தில் காணலாம். அருகில் வேம்படி மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி சொக் கலிங்கமும் மற்றொரு பாடசாலை அதிபரும் காணப்படுகின்றனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாடசாலை

# கல்விப் பணி மூலம் சமூகத்துக்கு அளப்பரிய பணி புரிந்தவர் சரவணமுத்து ஆறுமுகம்

— பேராசிரியர் ஆறுமுகம்

(யாழ். விசேட நிருபர்)

கல்லூரிகள் எதையும் நிறுவாமல் கல்விப் பணி புரிந்தவர் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம். முறைசாராக் கல்வி மூலம் கல்வி கற்க ஆர்வம் இல்லாதவருக்கும் இவர் கல்வி போதித்தார். தபால் மூலமான கல்விச் சேவையை முதன் முதல் ஆரம்பித்தவரும் இவரே. மூதறிஞர் ராஜாஜி, கி. அ. பெ. விஸ்வநாதம் போன்ற இந்தியத் தமிழ் அறிஞர்களின் நட்புக் காரணமாகக் கிடைக்கப்பெற்றபல அரிய நூல்களைக் கொண்டிருந்த இவரது நூலகத்தைச் "சங்கப் பலகை" என்ற இரவல் வழங்கும் நூலகம் ஆக்கினார். யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு நூல்களைச் சேகரித்து வழங்கி அதனையும் வளம் படுத்தினார்.

இவ்வாறு வசாவிளான் மத்திய கல்லூரியில் நடைபெற்ற தசாவதானி சரவணமுத்து ஆறுமுகத்தின் நினைவுப் பேருரையை நிகழ்த்தும் போது பேராசிரியர் ஆறுமுகம் கூறினார். வசாவிளான் மத்திய கல்லூரியின் அதிபர் ஆ. சி. நடராசா பேருரைக்குத் தலைமை வகித்தார்.

"யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியமும் இன்றைய நிலையும்" எனும் பொருள் பற்றி பேசுகையில் பேராசிரியர் ஆறுமுகம் மேலும் தெரிவித்ததாவது:- ஆரம்பத்திலே சைவ ஆலயங்களில் இருந்த அந்தணர்களே கல்வி ... கூறி கற்கத் தயங்கினர். இவர்களது பயத்தை நீக்குவதற்கு "கையெழுத்துப்போட கற்றுக்கொள்" என்ற கல்வித் திட்டத்தை தீட்டி ஒவ்வொருவரதும் பெயரை எழுதுவதற்குத் தேவையான எழுத்துக்களை மாத்திரம் எழுதப்பழக்கினார். பெண்கள் வீட்டிலேயே அடிப்படைக் கல்வியை பெறுவதற்காக ஒவ்வொருவரும் இன்னொருவருக்கு கல்வி பயிற்றுவிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் ஓரிரு அச்சகங்கள் மட்டும் இருந்த அக் காலத்தில் தனவந்தர்களை ஊக்குவித்து பல அச்சகங்கள் அமைய வழிவகுத்தார். இலங்கை திருக்குறள் பீடம் என்ற அமைப்பை நிறுவிப் பாமர மக்களும் திருக்குறளை அறிய வழி வகுத்தார். இலகுவாகப் பிரயாணம் செய்வதற்கு பெண்கள் சைக்கிள் ஓட வேண்டுமென உற்சாகம் அளித்தார்.

விதவைகள் மறு திருமணம் செய்யக் கூடாது என்ற கோட்பாட்டை இவரே தகர்த்தெறிந்து அவர்கள் வளமுடன் வாழ வழிவகுத்தார். தாதி தொழிலை மக்கள் அக் காலத்தில் விரும்பவில்லை. இதனை அவதானித்த தசாவதானி நாடகங்கள் மூலம் அவற்றின் மகிமையை மக்களுக்கு உணர்த்தினார்.

முறைசாராத் தொழிலாளர்களும் முதுமையில் ஓய்வூதியம் பெற வழி வகுக்கும் திட்டத்தைத் தீட்டி அவற்றை நடைமுறைப்படுத்துமாறு அரசிடம் கோரினார். இதுவே விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் செயலுருப் பெறக் கால்கோளாக அமைந்தது. இப்படி அவர் கூறினார். (டி)

பப்பாசிப் பழத்தினதும் சோயாஅவரையினதும்
மகிமையை மக்களுக்கு உணர்த்தியவர்.
தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம்

# மாணவர்களின் அறிவு அகலமாக நூல்களை வாசிக்க வேண்டும்

- கலாநிதி க. அருணாசலம்

(தென்மராட்சி)

மாணவர்கள் பரீட்சைக்கு தேவையான நூல்களை மாத்திரம் கற்காமல் அறிவுப் புலத்தை அகலமாக்கும் வகையில் பல நூல்களையும் வாசிக்க வேண்டும். வாசிப்பதுடன் நின்று விடாது நல்ல நூல்களைச் சேகரித்து இல்லங்கள்தோறும் வைத்திருக்கவேண்டும். இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க. அருணாசலம் தெரிவித்தார் அண்மையில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மண்டபத்தில் அமரர் சரவணமுத்து ஆறுமுகம் நினைவுப் பேருரையை நிகழ்த்திய அவர் தொடர்ந்துஉரையாற்றுகையில்

வாசித்த மனிதனாகவும்; தசாவதானியாகவும் விளங்கியஅமரர் சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள் அரிய பல நூல்களை சேகரித்து தமது இல்லத்தில் நூலகம் ஒன்றையேவைத்திருந்தார். தென்மராட்சிப் பகுதியில் புத்தகங்களை இரவல் கொடுக்கும் முதலாவது நூலகமாக அதுவிளங்கியது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கூட இல்லாத அரிய பல நூல்களை இந்த நூல் நிலையத்திில்காணக்கூடியதாக இருந்தது. இப்புத்தகங்களை இரவல்கொடுத்து தென்மராட்சியின் கல்விவளர்ச்சிக்கு அவர்பெரிதும் உதவியுள்ளார். எனது கலா நிதிப் படிப்புக்கு கூட அவரிடம் நான் இரவல் வாங்கிப் படித்துள்ளேன்.

ஒரு புகையிரதம் தான் சென்றடைய வேண்டிய இடத்தை அடைவதற்கு தண்டவா... லேயே நிற்க வேண்...

# கருத்தரித்துப் பிள்ளை பெறத்தக்க ஆரோக்கியம் யாழ்ப்பாணத்தில் மிகப்பல பெண்களிடம் இல்லை!

## மருத்துவ விரிவுரையாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 14 'தாய்மைப் பேறு அடைவதற்கு—கருத்தரித்து ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றுத்தானும் ஆரோக்கியமாக வாழ்வதற்குத் தேவையான ஆரோக்கியமான நிலையில் யாழ்ப்பாணத்தில் மிகப்பல பெண்கள் இல்லை. அண்மையில் யாழ்ப்பாணத்தில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இங்குள்ள தாய்மாரி... மிக அதிகமானோர் இ... சோகையினால் ... டிருந்தது ... டுள்ள... டிய ... ணகளைப் ... தாதியரி... ாம். ... டின் ஆண்... ளர் ... த்து...

## மாணவர்களுக்கு கவனச் சிதறல் ஏற்பட்டால் கல்வியி...

## கவனம் திசை தி...

(நாவற்குழி...

க... தி... டும். கலை... உட்பு... பான், ... னக் க... கவனக் ... இருவகைப்... லைக்காட்சி... வாகனங்களி... போன்றவை ... கவனக் கலை... எனப்படும். இ... குந்து ஒதுங்குவது... மன்று. ஆனால் வி... யவர்களைப் பற்... நினைவுகள், பார்... படங்களின் காட்சிக... சுவையான அனுபவங்கள், பயங்கர அனுபவங்கள் போன்றவை உட்புற கவனக் கலைப்பான். இவை கல்வியில் கவனத்தைச் செலுத்த விடாது. இவற்றை நீக்குவது கடினமானது. இதனை நீக்குவதற்கு தியானம் அவசியம்.

தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுப் பேருரையின்போது உரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் உடல் நல செயற்திட்ட இணைப்பாளர் சி. அருணகிரிநாதன் மேற்கண்டவாறு கூறினார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில், ஆசிரியர் ...

... வேறு... களை ... கோபம் உடனே ... யில் ஆழ... பதனால் கட்டுப்படுத்த விளைவுகளை... லாம். இதை மாணவ சமுதாய... றும் நினைவில் வ... கொள்ள வேண்டும் ... றார்.

(டி)

...சல் ...டக்கல்வி ...லையை மாற்ற ...ட முறைப்படுத்திய ...ையைக் 'கட்டுதல்' என அழைக்கப்பட்ட முறை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது — என்றார். (ஐ)

ஈழநாடு சனிக்கிழமை

# தாதியர் பயிற்சிக் கல்லூரியை இங்கு இயங்க வைப்பது அவசியம்

## முன்னாள் மருத்துவ பீடாதிபதி கோரிக்கை

ஒரு நாட்டில் நோயாளர்களை ஒழுங்காகப் பராமரிப்பதற்கு அத்தியாவசியமானது தாதியர் சேவை. போர்க்கால சூழ் நிலையில் தாதியர் பயிற்சிக்கல்லூரி சிறப்பாக நாம் தாதியர் பயிற்சிக்கல்லூரியை இயங்கச் செய்யாவிட்டால் அது வேறு பகுதிகளுக்கு இடம்மாற்றும் செய்யப்படும் ஆபத்து உண்டு.

இவ்வாறு நேற்று மாலை சாவகச்சேரி நூல் நிலைய மண்டபத்தில் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவாக சுகம் என்ற தலைப்பில் நினைவுப் பேருரையாற்றிய யாழ் பல்கலைக்கழக முன்னாள் மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி சிவஞான சுந்தரம் (நந்தி) தெரிவித்தார்.

அவர் மேலும் தனதுரையில் மேலைநாடுகளில் சாதாரணமாக ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 500 பேர் வசித்து வருகின்றனர். தற்போது சாவகச்சேரியில் ஒரு சதுரகிலோ மீற்றர் பரப்பளவில் 4000 பேர் வசித்து வருகின்றனர் முன்பு சாவகச்சேரியில் ஒரு சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் 50 பேரே வசித்து வந்தனர். 2500-ம் ஆண்டளவில் எட்டவேண்டிய சனத்தொகை அடர்த்தியை நாம் இப்போதே அடைந்து விட்டோம்.



காயமடை...

இரத்த...

'குருதிப் பரிசோத...களும் அவற்றின் பயன்...களும்' என்னும் தலை... நினைவுப் பேருரையா... யாழ். போதனா வை... சாலை நோயியல் பி... துறைத் தலைவர் டா... செல்வி பரமேஸ்வரி ...லப்பா தெரிவித்ததாவ...

யாழ்ப்பாண மக்க... மோட்டார் சைக்கிள் ...ளையில் அதிக பிரியம்... பட்டதன் விளைவாக ...துக்கள் பெருகிக் காய... வோருக்கு இரத்தம் ... வேண்டிய தேவை அதி...துள்ளது. இதனால் ...தத்தின் மூலம் பரவும் ...கள் தொற்றும் வாய்... அதிகரித்துள்ளது. இர... ஏற்றப்படுவதற்கு ... எய்ட்ஸ், செங்கண்... மலேரியா, மேகநோய் ...வற்றுக்கான பரிசோ...களைச் செய்து, இந்...கள் தொற்றாதிருக்க ...

# கண் தானம் ஓர் புண்ணிய கருமம்

வலம்புரி

# பெண்கள் அடக்குமுறைக்கு எதிர... குரல்கொடுத்தவர் சரவணமுத்து...

## வேம்படி மகளிர் கல்லூரி உப அதிபர் தெரிவி...

(யாழ்ப்பாணம்)

பெண்கள் அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்தவர் ... வாளர் தசாவ... முத்து ... முத்து ஆ... வக்சி... அன்றே ...

...யில்;

பெண்கள் இன்று ...தில் உயர்நிலையில் அறிவுமிக்கவர்களாகத் ... செய்வதில் இவர் ... பங்கு கொண்டு தன்ன... சேவைகளை ஆற்றின...

சென்ற நூற்றா...முற் பகுதியில் இந்... சென்று கல்வி கற்ற... சிலர் அங்கு மிகவும் ...மாகக் கடைப்பிடிக்க... எவ்வந்த 'சதி' என்னும் ... கேட்டை ஏறும் வழக்... இங்கு புகுத்திட ... என வாதிட்டு நின்ற...

அவர்களுக்கெ... தகுந்த பதிலடி ... அவ்வாறானபழமை... கொள்கைகளை எ... எங்கள் மண்ணில் ... புறமுதுகிட்டோடச் ...வர்.

கணவனை இழ... கருத்தில் கொள்ளா... நகையாடிய வே... விதவைகள் மறும... னும் மறுமலர்ச்சி... பெண்கள் வாழ்வில் ...றிய இந்த தெய்... நாம் செய்யும் ... அவர் கொள்கை ... பதே என்று தெரி...

# 'சகலதுறைகளிலும் சமூக சேவைசெய்த பெருந்தகை'

(நமது நிருபர்)

"தென் இலங்கையில் டாக்டர் ஹட்ஸன் சில்வா "கண்வங்கி" அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த வேளையில் அமரர் சரவணமுத்து ஆறுமுகம் "தமிழ்திலக் கண்தான இயக்கம் என்ற இயக்கத்தை வடக்கில் ஆரம்பித்து வைத்து அதற்கான பிரசாரத்தையும் மேற்கொண்டிருந்தார் என்றால் அன்னாரின் சமூகசேவையைப்பற்றி மேலும்கூற வேண்டுமா?"

இவ்வாறு சமூகசேவையாளர் தசாவதானி அமரர் சரவணமுத்து ஆறுமுகம் அவர்களின் நினைவுப்பேருரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி குகதாஸன் கூறினார்.

மீசாலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நினைவு தினக்கூட்டத்திற்கு தலைமைதாங்கிய வைத்திய கலாநிதி தொடர்ந்து கூறியதாவது:-

இறந்தவர்களின் உடலில் நல்ல நிலையில் உள்ள விழிவெண்படலம் என்ற பகுதியை எடுத்து விழிவெண்படலச் சீர்கேட்டால் பார்வையிழந்து இருப்பவர்களுக்குப் பொருத்தினால் அவர்கள் பார்வை பெறுவார்கள் என்று பிரசாரங்களை பிரசுரவாயிலா... செய்தார். இதற்கு முன்னோடியாக தனது மரணத்...தனது கண்களை எடுத்து பார்வையற்றவர் ...ப்படி சாசனம் ஒன்றையும் எழு...

அமைத்தார். அதில் இரவல் கொடுக்கும் பகுதியையும் அமைத்துத் தனது செலவில் பல அறிவுசால் இலக்கிய நூல்களை வாங்கி இப்பகுதி மக்களை வாசிக்க வைத்தார். பாமரமக்களுக்கும் அறிவுத்தாகத்தை ஏற்படுத்தினார். அவர்களின் அறிவுத்தாகம் தீரும்வரை நல்ல இலக்கிய நூல்களைக் கொடுத்துதவினார்.

மேலும் மட்டுவிலில் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயருடன் இணைந்து ஓர் அச்சகத்தை நிறுவினார். அதன் மூலம் நல்ல தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட வழிசமைத்தார். "ஆத்திசூடி", "கொன்றைவேந்தன்" என்ற நூல்களையும் இருநூல் சூத்திரங்கள் என்ற பெயரில் தொல்காப்பியம், நன்நூல்களையும் அச்சிட்டு இலக்கண நூல்களின் சூத்திரங்களையும் பயன்படக்கூடியதாக இப்பகுதியிலுள்ள ஏழை மக்களுக்கும் மலிவு விலையில் கொடுத்தவர்.

தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம்
அவர்களின் தலைமையில் இயங்கி,
அவரது மறைவுடன் செயலிழந்திருந்த
இலங்கை திருக்குறள் பீடத்தின்
தலைமைப் பதவியை ஏற்று
அதனைப் புதுப்பொலிவுடன் இயங்க
வைக்க நடவடிக்கை எடுக்கும்
பட்டமேற்படிப்பு பீடாபதி பேராசிரியர்

**அ. சண்முகதாஸ்**

அவர்களை,

ஓஃசெற், கம்பியூட்டர், றோனியோ,
லெட்டர்பிறெஸ், அச்சுவேலைகளை
மேற்கொள்ளும் திருவள்ளுவர்
அச்சகம் பாராட்டுகிறது.

தொலைபேசி எண் : 2181
தொலைநகல் எண் : 2687

593, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திருவள்ளுவர் ஒவ்(f)செற் பிறின்டிங், நல்லூர், யாழ்ப்பாணம்.